# மதுராவல பிரதேச சபை
# கழுத்துறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 பெப்ரவரி 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் மதுராவல பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதுராவல பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்திருந்த 20 குப்பை வண்டிகளின் பெறுமதியான ரூபா 82,500 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் இருப்பு விநியோகித்தல்கள் ரூபா 14,506,380 தொகையானது செலவினமாக கணக்கு வைக்கப்படாமல் அதற்குப் பதிலாக இருப்புக் கொள்வனவுகளில் ரூபா 8,767,325 தொகை செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் காணி மற்றும் கட்டிடக் கொள்வனவுகள் / நிர்மாணச் செலவுகளான ரூபா 9,680,076 தொகைகள் நிதிக்கூற்றுக்களில் பிழையாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பேரேட்டுக் கணக்கில் ரூபா 6,745,253 தொகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பொழிப்புச் செலவினப் பதிவேட்டில் செலவினத் தலைப்பு 304(4) இல் ரூபா 6,905,762 தொகையான செலவினம் வருமானச் செலவினக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,591,518 தொகையான தளபாடங்களினதும் பொருத்திகளினதும் செலவினம், பேரேட்டில் ரூபா 2,696,657 தொகையாகக் குறிப்பிடப்பட்டமையினால் தளபாடங்களும் பொருத்திகளும் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 105,139 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) பொழிப்புச் செலவின பதிவேட்டின் பிரகாரம் நூலகப் புத்தகக் கொள்வனவுகள் ரூபா 152,674 தொகை மற்றும் நன்கொடையாகக் கிடைத்திருந்த ரூபா 42,389 தொகைகளின் கூட்டுத்தொகையான ரூபா 195,063 ஆனது நூலகப் புத்தகக் கணக்கில் ரூபா 199,307 தொகை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(எ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பரிட்சை மீதியின் பிரகாரம் பொதுக் கணக்கின் காசுமீதி ரூபா 8,189,403 ஆக இருந்த போதிலும் ஐந்தொகையில் அம்மீதி ரூபா 9,975,218 ஆகக் காட்டப்பட்டிருந்தது. மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் தொங்கற் கணக்கின் வரவு மீதி ரூபா 1,452,614 ஆக இருந்த போதிலும் ஐந்தொகையில் ரூபா 3,238,429 தொகையாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் மின்சார களஞ்சிய மீதி மற்றும் ஆணடிற்காக ஒதுக்கப்பட்டிருந்த கடன்கொடுத்தோர் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 172,004 மற்றும் ரூபா 2,552,539 தொகைகளாக இருந்ததுடன் பேரேட்டின் பிரகாரம் ரூபா 207,600 மற்றும் ரூபா 2,659,945 தொகைகளாகவும், பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 189,802 மற்றும் ரூபா 2,552,217 தொகைகளாகவும் காணப்பட்டது.

(ஆ) வருடத்தின் ஊழியர் கடன் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் ஊழியர் கடன்பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 1,645,679 மற்றும் ரூபா 3,739,250 தொகைகளும், பொழிப்பு வருமானம் மற்றும் செலவினப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 1,097,994 மற்றும் ரூபா 3,662,863 தொகைகளாக இருந்ததுடன் வரவு செலவுப் பொழிப்பின் பிரகாரம் ரூபா 1,648,836 மற்றும் ரூபா 3,662,863 தொகைகளாகவும் காணப்பட்டது.

(இ) 08 கணக்கு விடயங்களுக்குரிய பொழிப்பு வருமானம் மற்றும் செலவினப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 30,936,527 தொகையும், ஒன்றிணைந்த வரவு, செலவுப் பொழிப்பின் பிரகாரம் அக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,682,488 தொகையாகவும் இருந்தது.

(ஈ) பேரேட்டில் ஏக்கர் வரி மற்றும் குத்தகை வாடகைக் கணக்குகளிலும் அதற்குரிய பட்டோலைகளின் ஆரம்ப மீதிகளுக்குமிடையே ரூபா 83,411 தொகையான வேறுபாடொன்றும், வீதவரிக் கணக்கு மற்றும் பட்டோலைகளின் ஆரம்ப மீதிகளுக்கும் இடையே ரூபா 216,571 தொகையான வேறுபாடொன்றும், வருடத்தின் பெறுவனவுகளில் ரூபா 11,469,706 ஆன வேறுபாடொன்றும் காணப்பட்டது.

### 1.3.3 தீர்க்கப்படாத கணக்குகள்

2006 ஆம் ஆண்டில் மதுராவல பிரதேச சபை ஸ்தாபிக்கப்பட்ட போது புலத்சிங்ஹல பிரதேச சபையினால் பிரித்து வழங்கப்பட்டிருந்த ரூபா 6,188,095 கூட்டுத்தொகையான 14 சொத்து மீதிகள் மற்றும் ரூபா 4,621,360 கூட்டுத்தொகையான 08 பொறுப்பு மீதிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும்

அம் மீதியினைத் தீர்த்து வைப்பதற்கு / அறவீடு செய்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2011 ஆகஸ்ட் 12 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,316,065 ஆகும்.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 8,720,285 கூட்டுத்தொகையான 07 கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியாதுள்ளது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்காமைகள்

சபையின் ஒரு வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக்கூற்றின் பிரகாரம் விநியோகிக்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 10,833 தொகையான 02 காசோலைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,481,831 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 16,901,177 ஆக இருந்தது.

### 2.2 நிதிக்கட்டுப்பாடு

02 வருமான விடயங்கள் மற்றும் 03 செலவின விடயங்களில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையில் 23% தொடக்கம் 74% வரையான வீச்சினுள் சாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் 04 வருமான விடயங்கள் மற்றும் ஒரு செலவின விடயத்திற்கிடையே 24% தொடக்கம் 61% வரையான வீச்சினுள் பாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டினுள் பாதீடானது சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாக பாவிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்ப்பித்திருந்த மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றி தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீத வரி மற்றும் வரி | 616 | 293 | 649 | 629 | 217 | 1,252 |
| (ii) | வாடகை | - | - | 188 | - | - | 187 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 226 | 226 | - | 268 | 267 | 122 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 342 | 342 | 121 | 365 | 365 | 124 |

### 2.3.2 நீதி மன்றத் தண்டப்பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதி மன்றம் ஒன்றினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 2,063,785 இற்கான தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 1,892,539 தொகையான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.3.4 விளம்பர அறிவித்தல் கட்டணம்

(அ) 2009 ஆம் ஆண்டில் விளம்பர அறிவித்தல் பலகைகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 46,512 தொகை 2011 ஆகஸ்ட் 03 ஆந் திகதி வரையிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அவ்விளம்பர அறிவித்தல்கள் அகற்றப்பட்டமைக்கான சான்றுகளும் காணப்படவில்லை.

(ஆ) மதுராவல – மதுகம வீதியில் பொருத்தப்பட்டிருந்த 09 நிலையான விளம்பர அறிவித்தல் பலகைகளிலிருந்தும் மற்றும் 03 தற்காலிக அறிவித்தல் பலகைகளிலிருந்தும் அறவிட வேண்டிய ரூபா 23,503 தொகையான கட்டணம் அறவிடப்படாதிருந்தமை 2010 ஆகஸ்ட் 03 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 2.3.5 காணி விற்பனை வரி

2010 ஆம் ஆண்டின் போது சபை அதிகாரப் பிரதேசத்தில் 05 காணிகள் ஏல விற்பனையின் போது 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி விற்பனையின் அடிப்படையில் நூற்றுக்கு 1 வீத வரியாக ரூபா 671,778 தொகை சபைக்கு கிடைத்திருந்த போதிலும் காணியின் விற்பனை விலையின் அடிப்படையில் வரி அறவீடு செய்வதற்குப் பதிலாக மதிப்பிடப்பட்ட விற்பனை விலை அடிப்படையில் வரி அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.6 சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்

2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 யூலை 31 வரை 16 சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது. 2008, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் 08 நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்கள் செல்லுபடியற்றதாகக் காணப்பட்ட போதிலும் திரும்ப ஒரு நிறுவனம் மாத்திரம் அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்திருந்ததுடன் அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்திருக்காத நிறுவனங்கள் தொடர்பாக சபையினால் எவ்வித செயல்நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு | உள்ளவாறான | முரண் | பாதீடு | உள்ளவாறான | முரண் |
| மீண்டுவரும் செலவுகள் | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' |
| ஆளுக்குரிய வேதனம் | 27,398 | 20,993 | 6,405 | 25,646 | 17,459 | 8,187 |
| ஏனையவை | 14,105 | 7,774 | 6,331 | 6,791 | 26,152 | (19,361) |
| உப கூட்டுத் தொகை | 41,503 | 28,767 | 12,736 | 32,437 | 43,611 | (11,174) |
| மூலதன செலவுகள் | 26.660 | 15,039 | 11,621 | 16,000 | 27,710 | (11,710) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 68,163 | 43,806 | 24,357 | 48,437 | 71,321 | (22,884) |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்**

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **பதவியினர் தரங்கள்** | **அங்கீகரிக்கப்பட்டவை** | **உள்ளபடியானவை** |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 02 | 01 |
| இரண்டாம் தரத்தினர் | 37 | 23 |
| ஆரம்ப தரத்தினர் | 70 | 63 |
| ஏனைய (சமயாசமய / தற்காலிய) | - | 20 |

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,620,193 ஆக இருந்தது.

### 2.6.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,405,547 ஆக இருந்தது.

## 2.7 இனங்காணப்பட்ட நட்டங்களும் இழப்புக்களும்

1999 தொடக்கம் 2010 ஏப்ரல் வரை வாசகர்களுக்கு வெளியே வழங்கப்பட்டு திரும்பக் கையளிக்கப்பட்டிராத ரூபா 11,754 பெறுமதியான 79 நூலகப் புத்தங்களுக்குரிய நபர்களிடமிருந்து மீளப் பெறுவதற்கோ அல்லது அவைகளின் பெறுமதிகளை பிணைகாரர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கோ 2011 யூலை வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 19 புத்தகங்கள் மீளக் கையளிக்கப்பட்டிருந்ததாகவும் 06 புத்தகங்களுக்காக காசு அறவிடப்பட்டிருந்ததாகவும் 2011 ஒக்தோபர் 29 ஆந் திகதி தலைவர் எனக்கு அறவித்திருந்தார்.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

நிலையான சொத்துப்பதிவேடு நாளதுவரை பேணப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்தல்கள் மற்றும் நன்கொடையாகக் கிடைத்திருந்த ரூபா 1,685,946 கூட்டுத்தொகையான 07 சொத்து விடயங்களும் அப்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் இல. 133, 134 மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் 2008 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய WP/LGD/10/2008 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்